**<u>நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

**முன்னிலை: திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.**

**நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்),**

**ஓசூர்.**

**<u>2026 - ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் திங்கள்கிழமை</u>**

**<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண்: 288/2016</u>**

**<u>தீர்ப்பு நாள் :23.03.2026</u>**

**<u>CNR NO:TNKI10-000194-2016</u>**

**<u>அரசுக்காக:-</u>**

காவல் ஆய்வாளர்,

உத்தனப்பள்ளி காவல் நிலையம்,

குற்ற எண். 19/2013. ... குற்றமுறையீட்டாளர்

/எதிராக/

ஜெயராமன் (வயது 47/2013),

த/பெ. மாரியப்பன்,

வாழைத்தோட்டம் கிராமம்,

பாலக்கோடு வட்டம்,

தருமபுரி மாவட்டம்.

(எதிரி, வயது மற்றும்

விலாசம் இறுதியறிக்கையின் படி) .... எதிரி

**<u>குற்றவியல் நடைமுறை விதி 106 ன் கீழான விவர பட்டியல்</u>**

| | | குற்றஞ்சாட்டப்பட்டவரின் விவரம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் | பெயர் | தந்தை /கணவர் பெயர் | இனம் அல்லது சாதி | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | ஜெயராமன் | மாரியப்பன் | இந்து | டிரைவர் | வாழைத்தோட்டம் கிராமம், பாலக்கோடு வட்டம், தருமபுரி மாவட்டம் | 47/2013 |

| நிகழ்வு | முறையீடு | கைது அல்லது முன்னிலை | பிணையின் பேரில் விடுதலை | விசாரணை யின் தொடக்கம் | விசாரணை யின் முடிவு | தண்டனை அல்லது ஆணை | தாமதத்தி ற்கான விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 24.02.2013 | 24.02.2013 | 27.02.2023 | 27.02.2013 | 12.08.2024 | 24.02.2026 | 23.03.2026 | - |

**சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021-ம் தேதியிட்ட**

**Roc.No.814/2020/RG/F1-ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 ன் கீழ் விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | - |
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 28.01.2014 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | --- |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச. 240 பிரிவின் கீழ் வினவிய நாள் | 11.07.2024 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுவின் விவரம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | குற்றப்பல்வகை மனு எண். | உத்தரவு அனுமதிக்கப்பட்டது / தள்ளுபடி செய்யப்பட்டது | மேல்முறையீட்டு வழக்கு விவரம் | |
| | Crl.M.P.No.256/2026, dt: 24.02.2026, U/s.311 Cr.P.C. | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம் | | | |
| | சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் | |
| | திரு.பெரியசாமி (Pw1) | 12.08.2024 | 12.08.2024 | அ.சா.1 |
| | திரு.அரியப்பன் (Pw2) | 12.08.2024 | 12.08.2024 | அ.சா.2 |
| | திருமதி.தங்கம்மாள் (Pw3) | 12.08.2024 | 12.08.2024 | அ.சா.3 |
| | திருமதி.நாகம்மாள் (Pw4) | 12.08.2024 | 12.08.2024 | அ.சா.4 |
| | திரு.மாரிமுத்து (Pw5) | 12.08.2024 | - | அ.சா.5 |
| | திரு.கிருஷ்ணன் (Pw6) | 12.08.2024 | - | அ.சா.6 |
| | திரு.மாதேவன் (Pw7) | 24.02.2026 | 24.02.2026 | அ.சா.7 |
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | | | 03.03.2026 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய /ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | | | --- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவு படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் மற்றும் தீர்வு | | | --- |

இவ்வழக்கு நீதித்துறை நடுவர் எண் - 2, ஒசூர் நீதிமன்றத்தினால் CC No:21/2014 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அதன் பின்னிட்டு இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு [நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஒசூர்] விசாரணைக்காக மாற்றலாகியுள்ள காரணத்தினால், இந்நீதிமன்றத்தினால் CC No:288/2016 என்ற ஆண்டு பட்டிகை வழக்கு எண் வழங்கப்பட்டு விசாரணையானது தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. இவ்வழக்கில், அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. V. கனிமொழி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.E.லோகநாதன் அவர்கள் ஆஜராகியும், இறுதியாக இவ்வழக்கு கடந்த 16.03.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஆவணங்களை நன்கு பரிசீலித்தும், இருதரப்பையும் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

## தீர்ப்புரை

1) இவ்வழக்கானது உத்தனப்பள்ளி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எதிரிக்கு எதிராக இந்திய தண்டனைச்சட்டம் 279 மற்றும் 304 (A) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற எண் - 19/2013 என்ற குற்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதியறிக்கையின்பேரில் தொடரப்பட்டதாகும்.

2) **இறுதியறிக்கையில் கண்டுள்ள குற்றச்சாட்டுகளின் சுருக்கம்**:

கடந்த 24.02.2013-ம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் உத்தனப்பள்ளி காவல் நிலைய சரகம் ஒசூர் to இராயக்கோட்டை ரோட்டில், தொட்டமெட்டரை பாலம் அருகில் TN – 29 - H - 5455 இராஜம் பஸ்ஸை மார்ஜினில் கண்ட எதிரி ஜெயராமன், த/பெ.மாரியப்பன் என்பவர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்றதில் தொட்டமெட்டரை கிராமத்தை சேர்ந்த உண்ணாமலையம்மாள் என்பவர் ரோட்டோரம் புளியங்காய் பொறுக்கி கொண்டு வீட்டுக்கு செல்ல தென்புறமிருந்து வடபுறம் போக ரோட்டை கடந்தபோது, அவர் மீது பஸ் மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி சம்பவத்தில் உண்ணணாமலையம்மாள் என்பவருக்கு மரணத்தை உண்டாக்கியதாகவும் குறிப்பிட்டு எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304 (A) -ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இறுதியறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையை பெற்று எதிரியானவர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த தேதியன்று வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் எவ்வித காலதாமதமுமின்றி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4) அரசு தரப்பில் தாக்கல் செய்திருந்த இறுதியறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த இறுதியறிக்கை மற்றும் குற்றத்தின் சாராம்சங்களை கு.வி.மு.ச பிரிவு 240 -ன் கீழ் இ.த.ச. பிரிவுகள் 279 மற்றும் 304 (A) -ன் கீழ் குற்றசாட்டுகளை விளக்கி கூறி வினவியபோது, எதிரியானவர் தனக்கு எதிரான குற்றச்சாட்டை மறுத்துரைத்து வழக்கினை விசாரணை செய்திட வேண்டுமென கோரியதன் அடிப்படையில் இவ்வழக்கானது விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு மேற்படி சாட்சிகளின் மூலமாக அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் அரசு தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்**

கடந்த 24.02.2013-ம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் உத்தனப்பள்ளி காவல் நிலைய சரகம் ஒசூர் to இராயக்கோட்டை ரோட்டில், தொட்டமெட்டரை பாலம் அருகில் TN – 29 - H - 5455 இராஜம் பஸ்ஸை மார்ஜினில் கண்ட எதிரி ஜெயராமன், த/பெ.மாரியப்பன் என்பவர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்றதில் தொட்டமெட்டரை கிராமத்தை சேர்ந்த உண்ணாமலையம்மாள் என்பவர்

ரோட்டோரம் புளியங்காய் பொறுக்கி கொண்டு வீட்டுக்கு செல்ல தென்புறமிருந்து வடபுறம் போக ரோட்டை கடந்தபோது, அவர் மீது பஸ் மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி சம்பவத்தில் உண்ணாமலையம்மாள் என்பவருக்கு மரணத்தை உண்டாக்கியதாகவும் குறிப்பிட்டு எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304 (A) ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்குரிய இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

7) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் என்னவென்றால், **அ.சா.1 திரு.பெரியசாமி** என்பவர் சம்பவத்தை கேள்விப்பட்டதை பற்றியும், சம்பவம் சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றியும், பிரேத விசாரணையின் போது சாட்சியாக உடனிருந்தது பற்றியும், மேலும் புகார் மனு **அ.த.சா.ஆ.1 எனவும், அ.சா.2 திரு. அரியப்பன்** என்பவர் சம்பவத்தை கேள்விப்பட்டதை பற்றியும், சம்பவம் சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றியும், பிரேத விசாரணையின் போது சாட்சியாக உடனிருந்தது பற்றியும், **அ.சா.3 திருமதி. தங்கம்மாள்** என்பவர் சம்பவத்தை கேள்விப்பட்டு சம்பவயிடம் வந்து, பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தது பற்றியும், **அ.சா.4 திருமதி.நாகம்மாள்** என்பவர்சம்பவத்தை கேள்விப்பட்டு சம்பவயிடம் வந்து, பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தது பற்றியும், **அ.சா.5 திரு.மாரிமுத்து** என்பவர்

சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றியும், பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தது பற்றியும், மேலும் பார்வை மகஜர் ஆவணத்திலுள்ள 1ம் சாட்சி கையொப்பம் **அ.த.சா.ஆ.2 எனவும், அ.சா.6 திரு.கிருஷ்ணன்** என்பவர் சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றியும், பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தது பற்றியும், மேலும் பார்வை மகஜர் ஆவணத்திலுள்ள 2ம் சாட்சி கையொப்பம் **அ.த.சா.ஆ.3 எனவும்,** மேலும் இவ்வழக்கில் புகாரை பெற்று, புலன் விசாரணை செய்து, எதிரியை கைது செய்து, விபத்து வாகனத்தை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வு செய்து, இறுதி விசாரணை முடித்து எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மனோகரன், காவல் ஆய்வாளர் திருமதி.புவனேஸ்வரி, மோட்டார் வாகன ஆய்வாளர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சிவக்குமார், காவல் ஆய்வாளர் திரு..கதிர்வேல் ஆகியோர்கள் வழக்கிலிருந்து விலக்களிக்கப்பட்டதால் அவர்களுக்கு பதிலாக உத்தனப்பள்ளி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் **திரு.மாதேவன் வழக்கு கோப்பின் அடிப்படையில் அ.சா.7 ஆக** சாட்சியம் அளித்துள்ளதாகவும், மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3 எனவும்,** மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.5 மற்றும் 6 எனவும்,** பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.7 எனவும்,** பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் செந்தில் என்பவரை விசாரித்து பெறப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.8 எனவும்** சாட்சியம் அளித்து ஆவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளது.

8) அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டிருந்த சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சூழ்நிலைகள் குறித்து எதிரியிடம் குவி.மு.ச. பிரிவு 313 (1) (b) -ன் கீழ் எடுத்துரைத்து வினவியபொழுது எதிரியானவர் அரசு தரப்பில் பொய் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அரசு தரப்பில் பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி தரப்பில் விசாரணை செய்திட சாட்சிகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சீராய்ந்து பரிசீலனை செய்யப்பட்டன.

10) அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பில் வழக்கை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்திருப்பதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11) எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பு சாட்சிகள் இறந்து போனவரின் உறவினர்கள் என்றும், அ.சா.1 விபத்து பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்திருப்பதாகவும், விபத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிட்டுள்ள சாட்சி விபத்து பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம்

அளித்திருப்பதாகவும், விபத்தை நேரில் பார்த்ததாக எந்த சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சிகள் யாரும் எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதால் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

**12) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304 (A) -ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**13) எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304 (A) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் குறித்த விவாதம்.**

(a) கடந்த 24.02.2013-ம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் உத்தனப்பள்ளி காவல் நிலைய சரகம் ஒசூர் to இராயக்கோட்டை ரோட்டில், தொட்டமெட்டரை பாலம் அருகில் TN - 29 - H - 5455 இராஜம் பஸ்ஸை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்றதில் உண்ணாமலையம்மாள் என்பவருக்கு மரணத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களுக்கு எதிரி தரப்பில் எவ்விதமான மறுப்புரையும்,

சாட்சியங்களின் வாயிலாகவோ அல்லது சான்றாவணங்கள் வாயிலாகவோ தெரிவிக்கப்படவில்லை.

எனவே, கடந்த 24.02.2013-ம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் உத்தனப்பள்ளி காவல் நிலைய சரகம் ஒசூர் to இராயக்கோட்டை ரோட்டில், தொட்டமெட்டரை பாலம் அருகில் TN - 29 - H - 5455 இராஜம் பஸ் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்றதில் உண்ணாமலையம்மாள் என்பவருக்கு மரணத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் உரிய வகையில் சந்தேகத்திற்கு இடமளிக்காமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(b) **இருப்பினும் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள விபத்தானது இவ்வழக்கின் எதிரி தான் TN - 29 - H - 5455 என்ற பதிவெண் கொண்ட இராஜம் பஸ்ஸை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்து ஏற்படுத்தினாரா என்பது குறித்து சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை சூழ்நிலைகளுடன் ஒன்றிணைத்து சீராய வேண்டியது அவசியமாகும்.**

(c) இவ்வழக்கின் புகார்தாரர் பெரியசாமி தனது புகார் மனுவில் தனது அம்மா 24.02.2013 ம் தேதி மாலை 7.00 மணிக்கு ரோட்டில் புளியங்காய் பொறுக்கி கொண்டு வீட்டிற்கு வர ரோட்டின் தென்புறம் இருந்து வடபுறம் வந்தபோது ஒசூர் to ராயக்கோட்டை நோக்கி வந்த ராஜம் பஸ் TN - 29 - H - 5455 ஐ ஓட்டி வந்தவர்

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இடது முன்சக்கரம் தனது அம்மாவின் மேலே ஏறிவிட்டதாகவும் தகவல் தெரிந்து ஓடிபோய் பார்த்தபோது பஸ்ஸின் இடது முன்சக்கரம் ஏறியதில் உடல் நசுங்கி தனது அம்மா இறந்துவிட்டதாகவும் கூறியுள்ளார். மேற்படி புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில், "**யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் யாரும் காரணம் இல்லை. விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் ஊர்காரர்கள் சொன்னார்கள், விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(d) மேற்படி அ.சா.1 தனது புகார் மனுவிலும், சாட்சியத்திலும், ராஜம் பஸ்ஸை யார் ஓட்டி வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. விபத்து நடந்த போது ராஜம் பஸ்ஸை ஆஜர் எதிரி தான் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார் என்று ஆஜர் எதிரியை அடையாளம் காட்டி அ.சா.1 சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும் அ.சா.1 உடன் புகார் கொடுக்க சென்ற அ.சா.1 ன் சகோதரர் அரியப்பன் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில், "**விபத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை**" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 ன் சகோதரி தங்கம்மாள் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில் "**விபத்து பற்றி போனில் தகவல் சொன்னதாகவும், விபத்து எப்படி**

**நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் இல்லை, நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை, எந்த பேருந்து எனது தாயின் மீது ஏறியது என்று எனக்கு தெரியுமா என்றால் KRMS பேருந்து ஏறியது"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(e) மேற்படி அ.சா.1, 2 சாட்சிகள் ராஜம் பஸ் தனது அம்மாவின் மீது ஏறி விபத்து ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ள விவரத்திற்கு முரண்பட்ட வகையில் அ.சா.3 தனது சாட்சியத்தில் அம்மாவின் மீது KRMS பேருந்து ஏறியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் 11 வருடங்களுக்கு முன்பு சம்பவம் நடந்துள்ளதாக அ.சா.1, 2 சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ள விவரத்திற்கு முரண்பட்ட வகையில் அ.சா.3 தனது சாட்சியத்தில் 7 வருடங்களுக்கு முன்பு சம்பவம் நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1ன் மற்றொரு சகோதரி நாகம்மாள் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில், "**விபத்து பற்றி போனில் தகவல் சொன்னதாகவும், விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் இல்லை, நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(f) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.5 மாரிமுத்து தனது சாட்சியத்தில், **"தான் தோட்டத்தில் வேலை செய்திருந்த போது தனது பாட்டி புளியங்காள் பறித்து கொண்டு வரும்போது ராஜம் பேருந்து மாலை 7.00 மணிக்கு தனது பாட்டியின் மீது ஏறி அனைவரும் சத்தம் போட்டு தான்**

**வந்து பார்த்த போது பேருந்தின் முன்சக்கரம் தனது பாட்டியின் நெஞ்சின் மீது ஏறி பாட்டி இறந்துவிட்டார்"** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.5 சம்பவத்தை சத்தம் கேட்டு வந்து பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.5 விபத்தை நேரில் பார்த்ததாகவும், விபத்து நடந்த போது ராஜம் பஸ்ஸை ஆஜர் எதிரி தான் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியதாகவும் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டி அ.சா.5 சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

(g) மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.7 தனது சாட்சியத்தில் **"சம்பவம் நடந்த இடத்தில் ஜீப்பரா கிராசிங் கோடுகள் இல்லை என்றால் சரிதான், ஒசூர் to ராயக்கோட்டை ரோடு குறுகிய ரோடு என்றால் சரிதான். சம்பவயிடத்தில் புளியமரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. அரசாங்கத்திற்கு சொந்தமானது. இறந்துபோன நபருக்கு 65 வயது இருக்கும் என்றால் சரிதான், இந்த வழக்கில் மகஜர் சாட்சிகளை தான் கண்ணுற்ற சாட்சிகளாக போட்டுள்ளார்கள் என்றால் தெரியாது. மகஜர் காட்சிகள் இருவரும் இறந்துபோனவரின் பேரன்கள் என்றும், வேறு சாட்சிகள் யாரும் இல்லாததால் பேரன்களை மகஜர் சாட்சிகளாக போட்டுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, பாட்டியம்மாவுக்கு சரியான கண் தெரியாது, காது கேட்காது என்றும்,**

**மரத்திலிருந்து விழுந்த புளியங்காய் எடுப்பதற்காக பேருந்து வருவதை கவனிக்காமல் திடீரென்று குறுக்கே சாலையை கடந்ததால் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், எதிரியின் வேகம் மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(h) மேற்படி அ.சா.7-ன் சாட்சியத்தையும், வழக்கு கோப்பையும் பரிசீலனை செய்த போது மகஜர் சாட்சிகள் இருவரும் இறந்து போன நபரின் பேரன்கள் என்பது தெரியவருகிறது. மேலும் வழக்கில் இறந்து போன பாட்டிக்கு சரியாக கண் தெரியாது, காது கேட்காது மற்றும் பாட்டிக்கு 65 வயதாகிறது என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் செய்துள்ள நிலையிலும், அரசு தரப்பில் விபத்தை நேரில் பார்த்ததாக கண்ணுற்ற சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்காத நிலையிலும் அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு விபத்து சம்பவம் நடைபெற்றதா என்பது குறித்து சந்தேகம் ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(i) மேலும் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர், பிரேத பரிசோதனை செய்த மருத்துவர், காய சான்று வழங்கிய மருத்துவர் ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்படுவதிலிருந்து உரிய முறையில் நீக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் அ.சா.1 முதல் 6 வரையிலான சாட்சிகள் யாரும் விபத்து சமயத்தில் எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

மேலும், இவ்வழக்கில் விபத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.6 விபத்து குறித்தும், விபத்தின் போது எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஓட்டினார் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டி அவர்தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்து ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

(j) மேற்படி இவ்வழக்கில் அ.சா.1 முதல் 6 வரையிலான சாட்சிகள் யாரும் விபத்தை நேரில் பார்த்ததாகவோ, ஆஜர் எதிரி தான் வாகனத்தை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்து ஏற்படுத்தியதாகவோ, எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்காத நிலையில், அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதால் தான் விபத்து நடந்தது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அரசு தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் அரசு தரப்பில் வழக்கில் சரியாக புலன் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்பதை காட்டுவதாக இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் விபத்தானது எதிரியின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் தான் நடந்தது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(k) இவ்வாறாக அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளுக்கு எவ்விதமான விளக்கங்களும், காரணங்களும் அரசு தரப்பில் ஏற்றுக்கொள்ள தக்க வகையில் அளிக்கப்படவில்லை. எனவே, விபத்தானது அரசு தரப்பில் சொல்லியவாறு நடைபெற்றதா என்பது குறித்து அரசு தரப்பினில் சந்தேகத்திற்குட்பட்ட வகையிலேயே சாட்சியங்கள் சான்றாவணங்கள் அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(l) அதுமட்டுமல்லாமல் அரசு தரப்பு சாட்சிகள் எவருமே சம்பவ சமயத்தில் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை ஓட்டி வந்த நபரை குறிப்பிட்டு அடையாளம் காண்பித்து எவ்விதமான சாட்சியமும் அளித்திருக்காத நிலையில் வழக்கு சம்பவமானது இவ்வழக்கின் எதிரியினுடைய அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் நடைபெற்றதாக இந்நீதிமன்றம் தன்னிச்சையாக எந்த அனுமானமும் கொள்ள இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(m) மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு சம்பவ இடம் மற்றும் விபத்து நடைபெற்றதாக சொல்லப்படும் விதம், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகள், விபத்து ஏற்படுத்திய நபரை அடையாளம் காட்டப்படாமை, சாட்சியங்களின் நம்பகத்தன்மை மற்றும் விபத்தில் தொடர்புடைய வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள சேதம் ஆகியவை குறித்து அரசு தரப்பில்

சந்தேகத்திற்கிடமளிக்காத வகையில் ஏற்கத்தக்க உரிய விளக்கங்கள் மற்றும் காரணங்கள் ஏதும் அளிக்கப்படாததால் அரசு தரப்பானது எதிரிக்கு எதிரான வழக்கினை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கத்தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக,

(i) எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 279 மற்றும் 304 (A) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிப்பது நீதியின்பாற்பட்டது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் எதிரியான என்பவருக்கு அளித்து எதிரியை இவ்வழக்கின் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248 (1) -ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்து உத்தரவிடப்படுகிறது.

(ii) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் வழக்கு சொத்துக்கள் குறித்த உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள்

இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஓம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்:-**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.பெரியசாமி (Pw1) | - | அ.சா.1 |
| 2 | திரு.அரியப்பன் (Pw2) | - | அ.சா.2 |
| 3 | திருமதி.தங்கம்மாள் (Pw3) | - | அ.சா.3 |
| 4 | திருமதி.நாகம்மாள் (Pw4) | - | அ.சா.4 |
| 5 | திரு.மாரிமுத்து (Pw5) | - | அ.சா.5 |
| 6 | திரு.கிருஷ்ணன் (Pw6) | - | அ.சா.6 |
| 7 | திரு.மாதேவன் (Pw7) | - | அ.சா.7 |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | | |
|---|---|---|---|
| 1 | புகார் மனு - அசல் | - | அ.த.சா.ஆ.1 |
| 2 | பார்வை மகஜர் ஆவணத்திலுள்ள 1ம் சாட்சி கையொப்பம் - அசல் | - | அ.த.சா.ஆ.2 |

| | | | |
|---|---|---|---|
| 3 | பார்வை மகஜர் ஆவணத்திலுள்ள 1ம் சாட்சி கையொப்பம் - அசல் | - | அ.த.சா.ஆ.3 |
| 4 | முதல் தகவல் அறிக்கை - அசல் | - | அ.த.சா.ஆ.4 |
| 5 | பார்வை மகஜர் - அசல் | - | அ.த.சா.ஆ.5 |
| 6 | மாதிரி வரைபடம் - அசல் | - | அ.த.சா.ஆ.6 |
| 7. | பிரேத விசாரணை அறிக்கை - அசல் | - | அ.த.சா.ஆ.7 |
| 8. | பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் செந்தில் என்பவரை விசாரித்து பெறப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை - அசல் | - | அ.த.சா.ஆ.8 |

**சான்று பொருள்: இல்லை**

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை.**

ஓம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**பின்குறிப்பு:-**

1) வழக்கு விசாரணையின்பொழுது எதிரிகள் நீதிமன்ற பிணையிலிருந்தார்.

2) வழக்கு முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

3) வழக்கு விசாரணையின்பொழுது எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை.